මහජන ආරක්ෂක සහ පාර්ලිමේන්තු කටයුතු අමාත්‍යාංශය
பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு
Ministry of Public Security and Parliamentary Affairs

# 2025

# වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව
# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# Annual Performance Report

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற
விவகார அமைச்சு

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# 2025

18 ஆவது மாடி, சுகுறுபாய, ஸ்ரீ சுபூதிபுர வீதி,
பத்தரமுல்ல.

# உள்ளடக்கம்


| | பக்க இல |
|---|---|
| 1. அத்தியாயம் - நிறுவன விவரம் / செயற்படுத்தல் சுருக்கம் | 01 - 05 |
| 1.1 அறிமுகம் | 01 |
| 1.2. தூரநோக்கு, செயற்பணி, குறிக்கோள்கள் | 02 - 03 |
| 1.3. விஷேட முன்னுரிமைகள் | 04 |
| 1.4. நிறுவன கட்டமைப்பு | 05 |
| 1.5. அமைச்சின் செயற்படும் நிறுவனங்கள் | 05 |
| 02. அத்தியாயம் – முன்னேற்றம் மற்றும் எதிர்கால இலக்கு | 06 -11 |
| 03. அத்தியாயம் – செயற்பாட்டு அறிக்கை | 12 - 16 |
| 04. அத்தியாயம் – செயலாற்றுகை குறியீடுகள் | 17 |
| 05. அத்தியாயம் - நிலைபெறுதகு அபிவிருத்தி குறிக்கோள்கள் | 17 - 22 |
| 06. அத்தியாயம் – மனித வள விபரம் | 23 |
| 07. அத்தியாயம்- இணக்கப்பாட்டு அறிக்கை | 24 - 32 |

# 01. அத்தியாயம் - நிறுவன விவரம் / செயற்படுத்தல் சுருக்கம்

## 1.1. அறிமுகம்

பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்பட்டு வந்த உள்ளக பாதுகாப்பு துறை 2020.11.20 திகதிய 2202/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வியப்பரப்பு திருத்தம் செய்யப்பட்டு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு நிறுவப்பட்டது. அந்த திகதியிலிருந்து அமைச்சின் விடயப்பரப்பு திருத்தம் செய்யப்பட்டது. 2024.11.25 திகதிய 2412/08 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அப்போதிருந்த அமைச்சின் விடயப்பரப்பு திருத்தம் செய்யப்பட்டு பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சு நிறுவப்பட்டது. அதற்கமைய, தற்போதைய அரசின் கொள்கைகளுக்கு அமைய பொதுமக்கள் சேவைகளை வினைத்திறனாகவும், மக்கள் நேயமாகவும் மேற்கொள்ள அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன. அதற்கமைய, நாட்டில் அனைத்து பிரஜைகளும் பயம், சந்தேகம் இன்றி சுதந்திரமாக வாழ்வதற்கு பொருத்தமான சூழமைவை உருவாக்குவதற்கும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நபர்களின் குடிவரவு மற்றும் குடியகல்வு கருமங்களுக்கான வசதிகளை வழங்குவதும், தேசிய பொருளாதாரத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் நாட்டில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்களை முறைமைப்படுத்துவதற்கும், போதைப்பொருள் அபாயத்தை ஒழிப்பதற்கும் பிரதானமாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

அதற்கமைய, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சுக்கு உரித்தளிக்கப்பட்ட பிரதானமான பொறுப்பான பிரஜைகள் பயம், சந்தேகமின்றி சுதந்திரமாக வாழ்வதற்கு உகந்த சூழமைவை உருவாக்குதல், பிரஜைகளின் அடையாளத்தை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சான்றுபடுத்துதல், போதைப்பொருள் அபாயங்கள் மற்றும் அபாயகரமான ஔடத துர்பாவனைகளை தடுத்தல் மற்றும் நாட்டில் செயற்படும் உள்நாட்டு மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களை அரச கொள்கைகளுக்கு அமைய செயல்ப்பட செய்வதன் மூலம் சட்டத்தை மதிக்கும் பிரஜைகளைக் கொண்ட சமூகத்தை உருவாக்குதற்காக அமைச்சினால் வகுத்து வழங்கப்படும் கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைய அனைத்து நிறுவனங்களும் செயற்படுகின்றன.

அதற்கு தேவையான திட்டங்களை தயாரித்து, அவற்றை அமுல்படுத்தி, அமைச்சின் பிரதான கருமங்களை நிறைவேற்றி, நாட்டின் அபிவிருத்தி கருமங்களுக்கு உதவ நடவடிக்கை எடுத்து வருகிறது. நீண்டகாலமாக தீர்க்கப்படாதிருந்த ஶ்ரீலங்கா பொலீஸ் அலுவலரிகளின் பதவி உயர்வு மற்றும் பயிற்சி தொடர்பான பிரச்சினைகளை தற்போது தீர்த்து வைப்பதற்கும், அவர்களுக்கு போதுமானளவு தொழில்நுட்ப மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கும் விஷேட கவனம் செலுத்தி பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சு செயற்பட்டு வருவதுடன், அதன் மூலம் மக்களுக்கு நேயமான சேவைகளை இலங்கை ஶ்ரீலங்கா பொலீஸில் உருவாக்க எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்குறித்த கருமங்களை நிறைவேற்றுவதற்காக அமைச்சின் விடயப்பரப்புக்கு உரிய கொள்கைகளை தயாரித்தல், வழிகாட்டுதல், அமுல்படுத்துதல், மேற்பார்வை, செயலாற்றுகை மதிப்பீடு மற்றும் தொடராய்வு செயற்பாடுகளுக்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் அமைச்சின் ஒவ்வொரு பிரிவினாலும் மேற்கொள்ளப்படுகின்றன.

## 1.2. நோக்கு

"சமாதானமான பாதுகாப்பான தேசம்"

## 1.2. பணிக்கூற்று

"பொதுமக்கள் பாதுகாப்பை உறுதி செய்யப்பட்ட சமூகத்தை உருவாக்குதல் மற்றும் போதைப்பொருள், குற்றங்கள் மற்றும் பயங்கரவாதம் இன்றி குடிவரவு, குடியகல்வை முறைமைப்படுத்துவதற்கு கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களை தயாரித்து அமுல்படுத்துதல்"

## 1.2. நோக்கங்கள்

- நாட்டு மக்கள் அனைவரும் சுதந்திரமாக வாழ்வதற்கு பொருத்தமான சூழலை உருவாக்குவதற்காக பொதுமக்கள் பாதுகாப்பை உறுதி செய்வதற்குத் தேவையான கொள்கைகளை வகுத்தல் மற்றும் வழிகாட்டுதல்.

- பொலீஸ் சேவையின் வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காக நவீன தகவல் தொழில்நுட்ப கருவிகள் மற்றும் பயிற்சி வழங்குவதன் மூலம் பொலீஸ் அலுவலர்களின் தொழில்வாண்மையை மேம்படுத்துதல்.

- மக்களின் வாழ்க்கையைப் பாதுகாப்பாகப் பேணக்கூடிய வகையில் தீவிரவாதம், பயங்கரவாத செயற்பாடுகள், கொள்ளை, ஆட்கொலை, பாதாள உலக செயற்பாடுகள், போதைப்பொருள் தொல்லையை அழிக்கக்கூடிய வகையில் ஸ்ரீ லங்கா பொலீஸின் புலனாய்வுப் பிரிவு மற்றும் செயற்பாட்டுப் பிரிவைப் பலப்படுத்திப் பேணுதல்.

- ஸ்ரீ லங்கா பொலீஸின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்குப் பொருத்தமான திட்டத்தைத் தயாரித்து அந்த செயன்முறை தொடர்பான மேற்பார்வை மற்றும் தொடராய்வு செயன்முறையைப் பலமாகப் பேணுதல்.

- வாகன விபத்துக்கள், அங்கவீனமடைதல் மற்றும் மரணங்களைக் குறைப்பதற்காக வாகன ஒழுங்குபடுத்தலைக் கட்டுப்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்துவதற்கு நவீன தொழில்நுட்ப செயலிகள் மற்றும் பாவனையை அறிமுகம் செய்தல்.

- சர்வதேச தரத்தில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தனிப்பட்ட அடையாளத்தை உறுதிப்படுத்தும் பின்னணியை அமைத்தல்.

- போதைப்பொருள் அச்சுறுத்தல் மற்றும் ஆபத்தான போதைப்பொருள் துஷ்பிரயோகத்தை எதிர்த்துப் போராடுவதற்கு பொருத்தமான மூலோபாய திட்டங்களை செயல்படுத்துதல்.

- இலங்கையில் இயங்கும் அனைத்து அரச சார்பற்ற அமைப்புகளையும் பதிவு செய்தல் மற்றும் அரச கொள்கைகளுக்கு அமைவாக அவை செயற்படுதலை உறுதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

## 1.2. கருமங்கள் மற்றும் பணிகள்

- அரசின் மூலம் அமுல்படுத்தப்படும் தேசிய கொள்கைகளின் அடிப்படையில் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரம் தொடர்பான விடயத்தில் வரும் திணைக்களம் மற்றும் சட்டவாக்க நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்களின் விடயங்கள் தொடர்பான கொள்கைகள், மூலோபாயங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் திட்டங்களை வகுத்தல், அமுல்படுத்துதல், தொடராய்வு செய்தல் மறறும் மதிப்பீடு செய்தல்.
- அமைச்சின் விடயபரப்புக்கு உரிய பொதுமக்கள் சேவைகளை வினைத்திறனாகவும், மக்கள் நேயமாகவும் வழங்குதல்.
- வீண் விரயம் மற்றும் மோசடிகளை ஒழித்து அமைச்சின் பணிப்பொறுப்பு நிறைவேற்றப்படுதலை உறுதி செய்வதற்கு உதவும் வகையில் நவீன முகாமைத்துவ முறைகள் மற்றும் தொழில்நுட்பங்களை பாவித்து அனைத்து முறைகள் மற்றும் விதிகளை மறுசீரமைத்தல்.
- சட்டம் மற்றும் சமாதானத்தை பேணுதல்.
- சமூக ஒழுக்கத்தை உறுதிப்படுத்தும் பரந்த மறுசீரமைப்பு உள்ளடங்கிய மூலோபாயங்களை அமுல்படுத்துதல்.
- சமூக அனர்த்தமாக மாறியுள்ள பல்வேறு வகையிலான குற்றங்கள் மற்றும் சமூக விரோத செயற்பாடுகளை தடுத்தல் மற்றும் தடுக்க நடவடிக்கை எடுத்தல்.
- வாகன போக்குவரத்தை கட்டுப்படுத்துதல். பொதுமக்கள் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், பொது மக்களுக்கு நெருக்கமான வகையில் பொலீஸ் சேவையின் சேவை மட்டத்தை மேம்படுத்துவதற்கு தேவையான மறுசீரமைப்புகளை மேற்கொள்ளுதல்.
- தேசிய கொள்கை வரையறைக்குள் அரச சார்பற்ற நிறுவனங்களின் கருமங்களை ஒருங்கிணைத்து, நாட்டின் அபிவிருத்தி செயன்முறைக்கு பங்களிப்பு செய்ய வாய்ப்பு வழங்குதல்.
- குடிவரவு மற்றும் குடியகல்வு செயற்பாடுகள்.
- அபாயகரமான ஔடத பாவனை தடுப்பு மற்றும் கட்டுப்பாடு.
- பாராளுமன்றம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் கருமங்கள் தொடர்பாக அரசால் நிறைவேற்ற வேண்டிய கருமங்கள். பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆளணி தொடர்பான நிறுவன செயற்பாடுகள்.

## 1.4. நிர்வாக கட்டமைப்பு

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சு




## 1.5 அமைச்சின் செயற்படும் நிறுவனங்கள்

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சின் கீழ் பின்வரும் நிறுவனங்கள் செயற்படுகின்றன.

i. ஶ்ரீ லங்கா பொலீஸ்
ii. விசேட அதிரடிப்படை
iii. அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பான தேசிய செயலகம்
iv. குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம்
v. அபாயகரமான ஔடத கட்டுப்பாட்டு தேசிய சபை
vi. தேசிய பொலீஸ் பயிற்சி நிறுவனம்

## 02. அத்தியாயம் - முன்னேற்றம் மற்றும் தொலைநோக்கு

- **மனித வள அபிவிருத்தி...**

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சின் விடயப்பரப்பு விரிவாக்கப்பட்ட பின்னர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் 479 அலுவலர்களைக் கொண்ட ஆளணி அங்கீகரிக்கப்பட்டது. அதற்கமைய 382 அபிவிருத்தி அலுவலர்கள் அங்கீகரிக்கப்பட்டு, அதில் 342 அலுவலர்கள் அபாயகரமான ஔடத கட்டுப்பாட்டு தேசிய சபையில் கடமையாற்றுவதற்காக இணைக்கப்பட்டுள்ளனர். அதற்கமைய இந்த அமைச்சின் ஒட்டுமொத்த ஆளணி 137 அலுவர்களைக் கொண்டுள்ள போதிலும், 98 அலுவலர்கள் பணியாற்றுகிறார்கள். 2025 டிசெம்பர் 31 திகதியில் ஒட்டுமொத்த ஆளணி தேவையின் 80% பூரணப்படுத்தவதற்கான இயலுமை கிடைத்தது. அத்துடன் சம்பளமற்ற விடுமுறை கோரிக்கையின் கீழ் 11 அமைச்சின் சிவில் அலுவலர்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விடுமுறை பெற்றுள்ளனர்.

- **அலுவலர்கள் பங்குபற்றிய பயிற்சி பாடநெறிகள் ...**

நிறுவனத்தின் பொது நோக்கை அடையக்கூடிய வகையில் ஆளணி உறுப்பினர்களுக்கு தேவையான அறிவு, மனப்பாங்கு மற்றும் திறன்களை விருத்தி செய்வதற்காக தொடர்ச்சியான பயிற்சிகளை வழங்குதல் கட்டாயமான விடயமாகும். அதற்கமைய அமைச் அலுவலர்களின் அறிவு, மனப்பாங்கு, திறன்கள் மற்றும் நேர்மய சிந்தனைகளை விருத்தி செய்வதற்கான பல்வேறு பயிற்சிகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

அதற்கமைய அலுவலர்களின் ஆற்றல் விருத்திக்காக உள்நாட்டில் பயிற்சி வழங்கும் நிறுவனங்களுடன் இணைந்து மொழிப் பயிற்சி, தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சிகள், விடயம்சார் பயிற்சிகள் என்ற ரீதியில் அமைச்சின் அனைத்து பதவிகளையும் சேர்ந்த ஆளணி உறுப்பினர்களுக்கும் மீளாய்வு காலத்தில் பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்பட்டன. அதற்காக 2025 ஆண்டில் ரூ. 987,000.00 பணம் செலவிடப்பட்டுள்ளது. அத்துடன் 2025 டிசெம்பர் 31 திகதி வரை அமைச்சின் 07 பதவிநிலை அலுவலர்கள் வெளிநாட்டு பயிற்சிகள் மற்றும் வெளிநாட்டு கருத்தரங்குகளில் பங்குபற்றினார்கள்.

- **விஷேடமான கருமங்களை முறையாக ஆரம்பிப்பதற்காக**

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களில் இடம்பெறும் கருமங்களை முறையாக, சட்ட ரீதியாக வரையறைக்குள் மேற்கொள்வதற்காக 2025 ஆண்டின் மீளாயவு காலத்தில் 70 அமைச்சரவை பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அந்த பத்திரங்களுக்கு கிடைத்த அமைச்சரவை அங்கீகாரம் மற்றும் விதந்துரைகளுக்கு அமைய அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் கருமங்களை முறையாக மேற்கொள்வதற்கு தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- **கிளீன் ஸ்ரீலங்கா நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தி ...**

"சுபீட்சமான நாடு அழகிய வாழ்க்கை" அரசின் கொள்கைப் பிரகடனத்தில் உள்ள நோக்கங்களை அடைவதற்காக 2025 ஆண்டில் கிளீன் ஸ்ரீலங்கா நிகழ்ச்சித்திட்டத்தை அமுலபடுத்த அரசு திட்டமிடப்பட்டுள்ளது. ஏற்ற வகையில் இந்த நிகழ்ச்சித்திட்டம் சமூக, சுற்றாடல் மற்றும் ஒழுக்கம் ஆகிய தூண்களின் அடிப்படையில் திட்டமிடப்பட்டுள்ளதுடன், அந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் இதுவரை காலமும் அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்தப்படாத துறைகள் ஊடாக நடவடிக்கை எடுக்க கிடைத்துள்ளது.

கிளீன் ஸ்ரீலங்கா நிகழ்ச்சித்திட்டத்தை பயனுள்ள முறையில் அமுல்படுத்துவதற்காக அரசு பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதுடன், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சுக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள கருமங்களை நிறைவேற்றுவதற்காக கிளீன் ஸ்ரீலங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் 300 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2025 ஆண்டின் Clean Sri Lanka நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சுக்கு நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளதுடன், குறித்த நிதி ஒதுக்கீட்டை பாவித்து, ஸ்ரீ லங்கா பொலீஸ், அபாயகரமான ஔடத கட்டுப்பாட்டு தேசிய சபை ஆகியவற்றால் திட்டமிடப்பட்ட கருத்திட்டங்களை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- **2025 ஆண்டு வரவுசெலவு திட்ட முன்மொழிவுகளை அமுல்படுத்தி ...**

இளைஞர்கள் போதைப்பொருட்களுக்கு அடிமையாதல் சமூகத்தின் பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது. அந்த நிலையை கட்டுப்படுத்துவதற்காக தண்டனை வழங்குவதற்கு அப்பால் சென்ற பல்வித அணுகுமுறையை பின்பற்றுவதற்கும், அதன்மூலம் போதைப்பொருள் அற்ற சமூகத்தை உருவாக்குவதற்கும் உள்ள இயலுமை தொடர்பில் அரசு இனங்காணப்பட்டுள்ளது. அதற்கு தேவையான திட்டங்களை அமுல்படுத்துவதற்காக 2025 ஆண்டின் வரவுசெலவு திட்ட முன்மொழிவாக இந்த அமைச்சுக்கு 500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, போதைப்பொருள் பாவனையின் பாதிப்புகள் தொடர்பான தெளிவுபடுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல், உளவளத்துணை உள்ளிட்ட புனர்வாழ்வு செயற்பாடுகள், போதைப்பொருட்களுக்கு அடிமையான நபர்களை வலுவூட்டுதல் மற்றும் சமூகத்தில் இணைப்பதற்காக அபாயகரமான ஔடத கட்டுப்பாட்டு தேசிய சபைக்கு 250 மில்லின் ரூபா வழங்கப்பட்டுள்ளது. அதன்மூலம் 10 திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. அத்துடன், போதைப்பொருள் தொடர்பான சட்டத்தை அமுல்படுத்துவதற்காக ஸ்ரீலங்கா பொலீசுக்கு 250 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளதுடன், அதன்மூலம் 12 திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன.

இந்த கருத்திட்ட அமுலாக்கத்தை மேற்பார்வை செய்தல், தொடராய்வு செய்தல் மற்றும் சரியான முறைமை ஊடாக அமுல்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்குதல் இந்த அமைச்சினால் மேற்கொள்ளப்படுகிறது. அத்துடன், இந்த திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு செயற்பாடுகள் நிதி அமைச்சின் சார்பில் முதலீட்டு மற்றும் மதிப்பீட்டு குழுவினால் மேற்கொள்ளப்படுகிறது.

- **பொலீஸ் நிலையங்களில் நிறுவப்பட்டுள்ள சிறுவர் மற்றும் மகளிர் பணியகங்களில் பௌதீக மற்றும் பொது வசதிகளை மேம்படுத்துதல் ...**

ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தின் பங்களிப்புடன் சிறுவர் மற்றும் மகளிர் பணியகங்களால் பொறுப்பேற்கப்படும் சிறுவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான அடிப்படை தேவைகளை நிறைவேற்றக்கூடிய வகையில் அடிப்படை வசதிகளுடன் பாதிக்கப்பட்ட நபர்களின் கௌரவம் மற்றும் அந்தரங்கம் பாதுகாக்கப்படும் வகையில் சுயாதீனமான நுழைவு வசதியுடனான அலுவலக வசதிகளை மேம்படுத்தும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இரண்டாம் கட்டமாக முருங்கன், தர்மபுரம், முகத்துவாரம், களுத்துறை தெற்கு, வலப்பனை, உப்புவெளி, ஓப்பநாயக்க ஆகிய பொலீஸ் நிலையங்களில் முன்மாதிரி சிறுவர் மற்றும் மகளிர் பணியக அலுவலகங்கள் நிர்மாணித்து நிறைவு செய்யப்பட்டு சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் மேற்குறித்த முன்மாதிரி சிறுவர் மற்றும் மகளிர் பணிகளில் இணைக்கப்பட்டுள்ள அலுவலர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு சாதகமாக, அவர்களது நலன்களை அடிப்படையாக கொண்ட சூழமைவை உருவாக்கி செயற்பட வேண்டிய முறை தொடர்பாக உளவளத்துணை சார்ந்த வழிகாட்டல் தொடர் பாடநெறி ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தின் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்டது.

- **குற்ற தடுப்புக்கான முறையான பொறிமுறையை தயாரித்தல் ...**

சந்தேகநபர்கள் தொடர்பான தகவல்கள் கிடைத்தவுடன், அவர்கள் தொடர்பான தேவையான தகவல்களை (Live Loccation) வழங்குவதற்கு கணிசமானளவு காலம் எடுப்பதனால், அதனை விரைவுபடுத்தி, குற்றங்கள், பயங்கரவாதம், போதைப்பொருள் அபாயங்களை ஒழித்து சட்டம் மற்றும் சமாதானத்தை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், சட்டபூர்வமான பிரஜைகளின் அடையாளத்தை உறுதிப்படுத்தும் நாட்டை உருவாக்குவதற்கு தேவையான வழிமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த செயன்முறையை மேலும் விரைவுபடுத்துவதற்காக இந்த அமைச்சினால் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், மோட்டார் போக்குவரத்து திணைக்களம், ஸ்ரீலங்கா பொலீஸ் ஆகியவற்றை ஒன்றிணைத்து தொலைபேசி அறிக்கை மற்றும் பயனர் உடனடி தரவுகள் மற்றும் வங்கி அறிக்கைகளை விரைவாக பெறுவதற்கான ஒருங்கிணைந்த பிரவேசத்தை உருவாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 2.1 பொதுமக்களின் குறைகளை விரைவாக தீர்த்துவைப்பதற்காக...

- **அமைச்சின் பொதுமக்கள் முறைப்பாடுகளை தீர்ப்பதற்காக ...**

அமைச்சின் ஒருங்கிணைப்பு பிரிவின் கீழ் நடத்தப்படும் பொதுமக்கள் முறைப்பாட்டு பிரிவின் மூலம் 118 தேசிய சேவை கூடத்தில் இடம்பெற்ற பொலீஸ் அலுவலர்களின் துர்நடத்தைகள் தொடர்பில் பொலீஸ் அலுவலர்களுக்கு எதிராக பொதுமக்களால் முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் மற்றும் பொலீஸ் நிலையங்களில் செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகள் தொடர்பில் மாகாண சிரேஷ்ட பிரதி பொலீஸ் மா அதிபர்களுக்கு அனுப்பி விரைவான விசாரணைகளை மேற்கொண்டு அவற்றின் முன்னேற்றத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், அமைச்சின் கீழ் இயங்கும் ஸ்ரீலங்கா பொலீஸ், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், அபாயகரமான ஔடத கட்டுப்பாட்டு தேசிய சபை, அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பான தேசிய செயலகம் ஆகிய நிறுவனங்களுக்கு எதிராக அனுப்பப்படும் முறைப்பாடுகளும் பெறப்பட்டு, தொடர்புடைய பிரிவுகளுக்கு அனுப்பப்படுகின்றன. அதன் கீழ் மீளாய்வு காலத்தில் 5,520 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதுடன், 6,932 முறைப்பாடுகள் ஸ்ரீலங்கா பொலிசுக்கு எதிராக கிடைத்த முறைப்பாடுகளாகும் என்பதுடன், அவை தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- **118 அவசர அழைப்பு சேவை**

அரச பாதுகாப்பு தொடர்பில் பொதுமக்களுக்கு தெரிந்த தகவல்களை விரைவாக அமைச்சுக்கு வழங்குவது 118 தேசிய சேவை கூடத்தின் அடிப்படைக் குறிக்கோள் ஆகும். அதற்கு மேலதிகமாக முப்படை, பொலீஸ் மற்றும் அமைச்சின் கீழுள்ள அனைத்து அரச நிறுவனங்களுக்கும் எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் மற்றும் கருத்துக்களை முன்வைக்கும் நிலையமாகவும் செயற்படுகிறது. மேலும், தற்போது 118 கூடத்தை மறுசீரமைத்து https://118.pubsec.gov.lk இணைதளம் மூலம் ஸ்ரீலங்கா பொலீஸ் முறைப்பாட்டு முகாமைத்துவ கட்டமைப்பு நிறுவப்பட்டு 24 மணிநேரமும் இயங்கும் வகையில் நிறுவப்பட்டுள்ளது.

அத்துடன் கணணி வலையமைப்பு மற்றும் மென்பொருள் கட்டமைப்பை (Call Center System and ELV Solution for 118) நிறுவி பேணப்படுகிறது. அதன்மூலம் பொது மக்களால் அனுப்பப்படும் முறைப்பாடுகள் மென்பொருள் கட்டமைப்பு மூலம் பெறப்பட்டு தேவையான வழிமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 118 முறைப்பாட்டு முகாமைத்துவ கட்டமைப்பு பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சு செயலாளரின் நேரடி மேற்பார்வையின் கீழ் அமைச்சு வளாகத்தில் இயங்கிவருகிறது. அந்த சேவைக்கு 2025 டிசம்பர் 31 திகதி வரை 105,450 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதுடன், அவற்றுக்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 2.2 அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்பார்வை செய்து …

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்கு வருடாந்த மூலதன நிதி ஒதுக்கீடுகள் தொடர்பாக அமுல்படுத்தப்படும் அபிவிருத்தி கருத்திட்டங்களின் முன்னேற்றம் காலாண்டு அடிப்படையில் மீளாய்வு கூட்டங்கள் நடைபெற்றது. விஷேடமாக நிர்மாணங்கள் மற்றும் பொருட்களைக் கொள்வனவு செய்யும் கருத்திட்டங்களில் பிரச்சினைகள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் தொடர்புடைய தரப்பினரை அழைத்து, அந்த பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு தேவையான ஆலோசனைகள் மற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன், ஒப்பந்ததாரர்களின் வினைத்திறனின்மை காரணமாக கருத்திட்டங்களை அமுல்படுத்துதல் சீர்குலைந்த கருத்திட்டங்களின் வெளிக்கள கண்காணிப்பு பயணங்கள் மேற்கொள்ளப்பட்டு தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.



- **அமைச்சின் உள்ளக கணக்காய்வு திட்டத்தை அமுல்படுத்தி …**

  - உள்ளக கணக்காய்வு பிரிவின் மூலம் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் கணக்காய்வு ஐயவினாக்கள், வருடாந்த செயற்பாட்டு திட்டம் மற்றும் பெறுகை திட்டங்களின் முன்னேற்றம் உள்ளிட்ட ஏனைய நிதி மற்றும் நிர்வாக செயற்பாடுகள் தொடர்பான சுற்றறிக்கைகள் மற்றும் சட்ட விதிகளுக்கு அமைய அமுல்படுத்துதல், மேற்பார்வை செய்வதற்கு தேவையான கணக்காய்வு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தயாரிக்கப்பட்ட கணக்காய்வு திட்டங்களுக்கு அமைய 2025 ஆண்டின் மீளாய்வு காலத்துக்காக அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. அதற்கமைய 2025 ஆண்டுக்கு உரியதாக தயாரிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வு திட்டம் அடையப்பட்டுள்ளது.

  - நிறுவன ரீதியான உள்ளக செயன்முறையை பலப்படுத்துவதற்காக அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களில் உள்ளக கணக்காய்வு பிரிவுகள் மூலம், கொடுப்பனவு வவுச்சர்கள், சொத்து முகாமைத்துவம், களஞ்சிய பரிசோதனை, வருடாந்த பொருள் கணக்கெடுப்பு, பொருட்களை அகற்றுதல், சுயவிபர கோவைகள் பராமரிப்பு, விடுமுறை மற்றும் வாகன பராமரிப்பு, அமைச்சின் இணையத்தளம் ஆகிய பிரிவுகள் ஊடாக உரிய காலத்தில் கணக்காய்வுகளை மேற்கொண்டு, ஒவ்வொரு பிரிவுக்கும் 35 உள்ளக கணக்காய்வு ஐயவினாக்கள் அனுப்பட்டுள்ளது.

## 2.3. ஏனைய நிறுவனங்களின் ஒத்துழைப்புகளை பெற்று…

தற்போதைய பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார கௌரவ அமைச்சர் அந்த பதவியை பொறுப்பேற்ற பின்னர் முதலாவதாக அமைச்சுடன் தொடர்புடைய பாரதூரமான பொறுப்புகள் மற்றும் கருமங்களை நிறைவேற்றுவதற்காக பல்வேறு தரப்பினரின் ஒத்துழைப்புகளை பெறுவதற்கான கலந்துரையாடல்களை நடத்தினார். அதன்போது வெளிநாட்டு பிரதிநிதிகளுடன் ஒருங்கிணைப்பு செய்வதற்கு தேவையான அமைச்சுக்களின் அமைச்சர்களுடனும் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. அதாவது சர்வதேச ஒத்துழைப்புகளை பெறுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கு தேவையான முன்மொழிவுகளை சமர்ப்பித்தல் மற்றும் உடன்படிக்கைகளில் கையெழுத்திடுதல் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.



- பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் துன்புறுத்தல்களை தடுப்பதற்காக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் இலங்கை பிரதிநிதி முரடெந யுனநலெைட உள்ளிட்ட பிரதிநிதிகள் மற்றும் கௌரவ பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சருக்கிடையிலான சந்திபபு இடம்பெற்றது. அத்துடன் நாட்டின் தற்போதைய பொருளாதார, சமூக நிலை தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. பொருளாதாரத்தை இயல்பு நிலைக்கு கொண்டுவருவதற்காக வழங்கக்கூடிய தீர்வுகள் தொடர்பிலும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.



- இருதரப்பு உறவுகளை பலப்படுத்துவதற்காகவும், தற்போதைய அரசின் கிளீன் ஸ்ரீலங்கா நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாகவும், ஊழல் மற்றும் மோசடி ஒழிப்பு தொடர்பாகவும் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் திரு. அக்கியோ அஸோமட்டா பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார கௌரவ அமைச்சர் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பில் கருத்து பரிமாறப்பட்டது.



- இலங்கைக்கான இஸ்ரேலிய தூதுவர் திரு. ரெவன் ஜேவியர் அஸார் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார கௌரவ அமைச்சர் ஆனந்த விஜேபால ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சில் நடைபெற்றது. அதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை பலப்படுத்துதல் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. அத்துடன் சர்வதேச செயற்பாடுகளில் இலங்கையுடன் ஒத்துழைத்து செயற்படுவதற்கு இஸ்ரேலிய அரசு விருப்பத்துடன் இருப்பதாகவும் தூதுவர் தெரிவித்தார். அத்துடன் நாட்டின் தற்போதைய பொருளாதார, சமூக நிலை தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. பொருளாதாரத்தை இயல்பு நிலைக்கு கொண்டுவருவதற்காக வழங்கக்கூடிய தீர்வுகள் தொடர்பிலும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

## 2.4. அமைச்சின் இடைக்கால இலக்கு 2025 - 2027

- பொலீஸ் அலுவலர்களின் பதவி உயர்வு, இடமாற்றம் மற்றும் ஒழுக்கம் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குதலை வினைத்திறனாக்குதல் மற்றும் தேவையான மனித வளங்களை வழங்குதல்.

- வாகன விபத்துக்களை குறைப்பதற்காக ஸ்ரீலங்கா பொலீஸின் போக்குவரதது பிரிவை புதிய தொழில்நுட்பத்துடன் பலப்படுத்த நடவடிக்கை எடுத்தல்.

- சர்வதேச தராதரங்களுக்கு அமைய வெளிநாட்டு கடவுச்சீட்டுக்களை தயாரித்தல், வீஸா மற்றும் பிரஜா உரிமை வழங்குவதற்கு குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தை பலப்படுத்துதல்.

- போதைப்பொருள் அபாயம் மற்றும் அபாயகரமான ஔடத துர்பாவனைகளை தடுப்பதற்காக அபாயகரமான ஔடத கட்டுப்பாட்டு தேசிய சபையை பலப்படுத்துதல்.

- அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பான தேசிய செயலகத்தை பலமான நிறுவனமாக மாற்றி, அதன்மூலம் தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு உயர் பங்களிப்பு வழங்குதல்.

## 03. செயற்பாட்டு அறிக்கை

ஏசீஏ- எப்

**2025 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

(ரூபா)

| திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2025 | | குறிப்பு | உண்மை நிலை 2025 | உண்மை நிலை 2024 | |
|---|---|---|---|---|---|
| - | **வருமானப் பெறுகைகள்** | | - | - | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசீஏ-1 |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் | 2 | - | - | |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | |
| - | வரியில்லாத வருமானங்களும் | 4 | - | - | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | - | - | |
| - | **வருமானமற்ற பெறுகைகள்** | | - | - | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 16,477,270,000 | 13,692,548,000 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 124,709,666 | 66,289,329 | ஏசீஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 78,230,154 | 73,359,626 | ஏசீஏ-5 |
| | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் | | - | - | |
| - | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **16,680,209,820** | **13,832,196,955** | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)** | | **16,680,209,820** | **13,832,196,955** | |
| | **திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)** | | 252,637,935 | - | |
| | **தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)** | | **16,427,571,885** | **13,832,196,955** | |
| | **கழி : செலவினம்** | | | | |
| - | **மீண்டுவரும் செலவினம்** | | - | - | |
| 10,678,752,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய | 5 | 10,441,397,599 | 10,841,366,258 | |
| 5,434,823,500 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 4,888,177,846 | 2,449,010,299 | ஏசீஏ- |
| 784,950,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் | 7 | 553,311,047 | 477,500,170 | |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | - | 18,440 | |
| **16,898,525,500** | **மொத்த மீண்டுவரும் செலவினம்** | | **15,882,886,492** | **13,767,895,167** | |
| | **மூலதனம் செலவினம்** | | | | |
| 738,976,000 | மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 459,634,298 | 289,569,977 | |
| 1,036,460,289 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 598,630,297 | 226,373,134 | |
| 254,383,000 | மூலதன மாற்றல்கள் | 12 | 203,953,494 | 164,094,797 | ஏசீஏ- |
| | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | |
| 13,400,000 | திறன் விருத்தி | 14 | 12,840,236 | 4,733,968 | |
| 750,000,000 | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | 213,461,966 | 1,148,260,476 | |
| **2,793,219,289** | **மொத்த மூலதனம் செலவினம் (எ)** | | **1,488,520,290** | **1,833,032,353** | |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | 111,708,662 | 89,810,225 | ஏசீஏ-4 |
| | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | 136,943,662 | 87,219,923 | ஏசீஏ-5 |
| | **ஏனைய பிரதான பேரேட்டுச்** | | - | - | |
| | **மொத்தபிரதான பேரேட்டுச்** | | **248,652,324** | **177,030,148** | |
| | **மொத்த செலவினம் ஐ =** | | **17,620,059,106** | **15,777,957,668** | |
| - | **ஒ = (உ-ஐ)** | | **(1,192,487,222)** | **(1,945,760,713)** | |
| | **பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி** | | **(1,192,503,622)** | (1,946,125,690) | ஏசீஏ-7 |
| | **பணிமுற்பண மீதி** | | **16,400** | 364,977 | ஏசீஏ-3 |
| | | | **(1,192,487,222)** | **(1,945,760,713)** | |

## 3.1. நிதி நிலைமை குறித்த அறிக்கை

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | ஏசீஏ -பீ |
| **2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று** | | | | |
| | | | **உண்மை நிலை** | |
| | குறிப்பு | | **2025** | **2024** |
| | | | ரூபா | ரூபா |
| **நிதி சொத்துக்கள் அற்றது** | | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | | 10,745,354,371 | 9,727,552,943 |
| **நிதி சொத்துக்கள்** | | p | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | | 107,831,692 | 49,121,933 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | | - | - |
| **மொத்த சொத்துக்கள்** | | | **10,853,186,063** | **9,776,674,877** |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | | 69,103,809 | 24,701,051 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | | 10,745,354,371 | 9,727,552,943 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | | 38,711,482 | 24,055,905 |
| தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | | 16,400 | 364,977 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | | **10,853,186,063** | **9,776,674,877** |

## 3.2. நிதிச் செயற்பாடு குறித்த அறிக்கை

ஏசீஏ- சீ

**2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான**
**காசுப் பாய்ச்சல் கூற்று**

| | உண்மை | |
|---|---|---|
| | **2025** ரூபா | **2024** ரூபா |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | - | - |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 1,296,100,428 | 991,807,572 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 16,477,270,000 | 13,692,548,000 |
| முற்பணங்களை அறவிடல் | 73,009,432 | 82,328,789 |
| வைப்புக்களின் பெறுகை | 124,709,666 | 66,289,329 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **17,971,089,525** | **14,832,973,690** |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடட்டுக் கொடுப்பனவுகள் | 15,237,559,367 | 13,111,882,978 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 120,842,248 | 89,376,874 |
| மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மூலதன மாற்றங்கள் திறன் வளர்ப்பு மற்றும் பிற மூலதனச் செலவினங்கள் | 785,856,321 | - |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 772,653,409 | 859,582,774 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 253,002,912 | - |
| முற்பணக் கொடுப்பனவு | 125,778,573 | 87,889,469 |
| வைப்புக் கொடுப்பனவு | 111,708,662 | 89,810,225 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **17,407,401,492** | **14,238,542,319** |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **563,688,033** | **594,431,370** |
| **முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | - | |
| பங்கு இலாபம் | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | - |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக்** | - | - |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:** | | |
| மூலதனச் சொத்துக்களின் நிர்மாணம், கொள்முதல் மற்றும் இதர முதலீட்டு பெறுதல்கள் | 564,036,610 | 594,066,394 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு** | **564,036,610** | **594,066,394** |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)** | **(564,036,610)** | **(594,066,394)** |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)** | **(348,577)** | **364,977** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |

| | | |
|---|---|---|
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு** | - | - |
| ***கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:*** | | |
| உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு** | - | - |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)** | - | - |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)** | **(348,577)** | **364,977** |
| **ஜனவரி 01 ஆம் திகதியீலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | **364,977** | **-** |
| **டிசம்பர் 31ஆம் திகதியீலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | **16,400** | **364,977** |

## 3.3 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

பக்க இலக்கம் 10 முதல் 12 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 13 முதல் 14 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். **2025 ஆம் ஆண்டின் 17.12.2025 திகதியிடப்பட்ட இல 02/2025 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.** அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் எண் தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38(1) (இ) இன் படி நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

| | | |
|---|---|---|
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | பிரதான நிதி உத்தியோகத்தர்/ ~~பிரதான கணக்காளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)~~ |
| பெயர்: | பெயர்: | பெயர்: 27/02/2026 |
| பதவி : | பதவி : | |
